**செ.கு.எண்:91** **நாள்:11.11.2021**

**இன்று (11.11.2021) மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் சென்னை, எழிலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி**

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மூலமாக தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் சராசரியாக 2102 மி.மீ தான் மழை பெய்திருக்கிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் அதிகபட்சமாக 130.64 மி.மீ. பதிவாகியுள்ளது, செங்கல்பட்டில்தான் அதிகமான பாதிப்பு. இன்றைக்கு காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் அநேகமாக மாலை சென்னை மற்றும் மகாபலிபுரத்திற்கு அருகில் கரையைக் கடக்கும் என்றும், இதன் மூலமாக, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் பலத்த மழை இருக்கும் என்றும் நாம் எதிர்பார்த்தோம். அதுபோல, இதுவரை மழை மட்டும் இருந்தது.

இன்றைக்கு 40 கி.மீ முதல் 50 கி.மீ வேகத்தில் காற்று வீசும் என்று வானிலை ஆய்வுமையம் எச்சரித்திருக்கிறது. ஆகவே, பொதுமக்கள் முடிந்த அளவிற்கு வெளியே செல்லாமல் இருக்கவேண்டும் என்று அரசின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம். பொதுவாக வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள் வெளியே போக வேண்டாம். சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் 40 முதல் 45 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசுகிற காரணத்தால் வீட்டிற்கு மேலே இருக்கின்ற அஸ்பெஸ்டாஸ் ஷீட், தகரங்கள் போன்றவைகள் கழன்று விழுகின்ற நேரத்தில் காயம் ஏற்படும் ஒரு சூழ்நிலை உருவாகும். அதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க, வெளியே போகாமல் இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

டெல்டா மாவட்டத்தில் மொத்தம் ஒன்றரை இலட்சம் ஏக்கர் அளவிற்கு நெற்பயிர்களும், வேறு பயிர்களும் பாதித்திருப்பதாக உத்தேசமாக ஒரு கணக்கு

எடுத்திருக்கிறோம். இன்றைக்கும், நாளைக்கும் மழைப்பொழிவு நின்றவுடன் உடனடியாக கணக்கு எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையான பணிகளையும் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு, முக்கியமான நீர்த்தேக்கமான செங்குன்றத்தில் இருந்து 3,000 கன அடி, செம்பரம்பாக்கத்தில் இருந்து 2,151 கன அடி, பூண்டியில் இருந்து 6,000 கன அடி, சோழவரத்திலிருந்து 2,015 கன அடி மட்டும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மழையின் அளவைப் பொறுத்து கூடுதலாக தண்ணீர் திறப்பதற்கு வேண்டிய அந்தப்பணிகளையும் மேற்கொள்ள அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளார்கள். இன்றைக்கு மழை மட்டுமல்லாமல் காற்றும் இருக்கின்ற காரணத்தினால் முக்கியமாக மரங்கள் முறிந்து விழக்கூடிய சூழ்நிலை இருக்குமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அதற்கு வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாநகராட்சி சார்பாக பாதுகாப்பில்லாத கிளைகளை மரங்களில் இருந்து அகற்றக்கூடிய தொழில்நுட்ப ஆட்களையும் நாங்கள் தயாராக வைத்திருக்கிறோம்.

ஏறத்தாழ 13 சுரங்கப் பாதைகள் பாதுகாப்பு கருதி முடிப்பட்டுள்ளன. பிற சுரங்கப் பாதைகள் திறந்திருக்கிறது. தொடர்ந்து மழை பெய்யும் என்று தெரியவரும் பட்சத்தில், சூழ்நிலைக்கேற்ப முடிவெடுக்கப்படும். மீதியிடங்களில் உள்ள தண்ணீரை மோட்டார் மூலமாக வெளியேற்றியிருக்கிறோம். பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். தண்ணீர் தேங்குகிற பகுதிகளுக்கு எல்லாம் நேற்றே அதிகப்படியான மோட்டார்களை

அனுப்பி வைத்திருக்கிறோம். ஆகவே, மழை பொழிந்து கொண்டிருந்தாலும், அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**கேள்வி** : இதுவரை எவ்வளவு புகார் அழைப்புகள் வந்திருக்கிறது? எவ்வளவு சரி செய்யப்பட்டுள்ளது?

**பதில்:** இதுவரை, மாநகராட்சிக்கு புகார் வந்தது 11,290 அதில் 5,395 புகார்கள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. எஞ்சியவற்றை அவர்கள் நேர் செய்துகொண்டிருக்கிறார்கள். பேரிடர் மேலாண்மை அழைப்பு மையத்திற்கு 1,800 புகார்கள் வந்திருக்கிறது, அவற்றில் 1,044 புகார்கள் தீர்வு செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டத்தில் 2 பேர் இறந்திருக்கிறார்கள், 154 கால்நடைகள் இறந்திருக்கின்றன, 146 குடிசைகள் சேதமடைந்திருக்கின்றன, 237 வீடுகள் சேதடைந்திருக்கின்றன. அதற்குரிய நஷ்ட ஈடு கொடுப்பதற்கு வேண்டிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் பாதிக்கப்பட்ட மக்களை உடனடியாக அருகில் இருக்கின்ற நிவாரண முகாமிற்கு அனுப்பி அவர்களை தங்க வைத்து வேண்டிய உணவுப் பொட்டலங்கள் மற்றும் வேறுவிதமான அனைத்து தேவையான வசதிகளை நாங்கள் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி**: வீடுகளும் சேதமடைந்திருக்கிறதா?

**பதில்:** தமிழ்நாடு முழுவதும் சேதம் அடைந்த குடிசைகள் 1146, சேதமடைந்த வீடுகள் 237.

**கேள்வி**: மொத்தத்தில் வடகிழக்குப் பருவ மழை தொடங்கியதிலிருந்து எத்தனை பேர் இறந்திருக்கிறார்கள்?

**பதில்:** மொத்தமாக இன்று வரை 14 பேர் இறந்திருக்கிறார்கள்.

**கேள்வி**: சென்னையில், பட்டாளம் மார்க்கெட் பகுதியில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கு உணவு கிடைக்கவில்லை என்று பேட்டி கொடுத்தார்கள். மார்பளவிற்கு தண்ணீர் இருக்கிறது, நாங்கள் முகாமிற்கும் போகமுடியவில்லை என்று சொன்னார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**பதில்** : உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். அந்த இடத்திலிருந்து மட்டுமல்ல வேறு இடத்திலிருந்தும் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அழைப்பு மையத்திற்கு புகார் வந்தாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தாராளமாக அம்மா உணவகத்திலும் உணவு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அதைத் தவிர, மாநகராட்சியிலிருந்தும் உணவு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, உணவுப் பற்றாக்குறை என்பதே இருக்காது. அதிகாரிகளின் கவனத்திற்கு அது வராமல் இருந்திருக்கும். இப்போது எங்கள் கவனத்திற்கு நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். உடனடியாக அதிகாரிகளுக்கு இது குறித்து தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும். எங்கள் கவனத்திற்கு வருவதை உடனடியாக செய்து வருகிறோம். இப்போது வார்டு ஒன்றிற்கு ஒரு அலுவலர் வீதம் 200 வார்டுகளுக்கு உணவிற்கு மட்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தங்கும் வசதி, துணிமணி வசதி இதை சரிபார்ப்பதற்கு மட்டும் 200 வார்டுகளுக்கு ஒரு அலுவலர் வீதம் 200 பேர்களை மாநகராட்சி மூலம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**கேள்வி**: குறைந்த காற்றழுத்தம் கரையைக் கடக்கும் போது காற்றினுடைய வேகம் அதிகமாக இருக்கும் அப்போது மகாபலிபுரம் சாலையில் போக்குவரத்தை நிறுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறதா?

பதில் : அந்த சூழ்நிலைக்கேற்ப முடிவு செய்யப்படும். காற்றின் வேகம் 40 முதல் 45 கி.மீ. என்று சொல்லியிருக்கிறார்கள். மரங்கள் எல்லாம் ஒடிந்து விழுகிற ஒரு சூழ்நிலை உருவானால் அங்கே இருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர், எஸ்.பி., போக்குவரத்தை எப்படி சீர் செய்யவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்வார்கள்.

**கேள்வி**: இதுவரை எத்தனை மரங்கள் ஒடிந்து விழுந்திருக்கின்றன?

**பதில்:** இதுவரைக்கும் மொத்தம் 149 மரங்கள் ஒடிந்து விழுந்திருக்கின்றன. அதில் 146 மரங்களை சீர் செய்திருக்கிறோம். முடிந்த அளவு மரக்கிளைகளை வெட்டுகிற வேலைகளை பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதை வெட்டினாலே மரங்கள் சாயாமல் இருப்பது குறையும். அதிகாரிகள் எச்சரிக்கையாக, எந்தப் பக்கம் மரங்கள் சாய்ந்திருக்கிறதோ அந்தப் பக்கம் உள்ள கிளைகளை எல்லாம் அகற்றக்கூடிய வேலைகளை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மழை மட்டுமல்ல, காற்றும் சேர்ந்திருக்கிறது. அதனால் முடிந்த வரை மக்கள் வெளியில் வரவேண்டாம். இன்றைக்கு அது தான் வேண்டுகோள்.

பயிர் சேதத்தை மட்டும் முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு சென்றிருக்கிறோம். முதலமைச்சரும் அதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். எல்லா மாவட்ட ஆட்சியரும் கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து கணக்கெடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். நெற்பயிர்கள் மட்டுமல்ல, மற்ற சாகுபடியும்

சேதமைடந்திருக்கிறது. அவற்றை எல்லாம் பார்ப்பதற்கு இன்றைக்கு மழை விட்டுவிட்டால் நாளை முதல் வேலைகளை துரிதப்படுத்திவிடுவோம்.

**கேள்வி:** NDRF மற்றும் SDRF தயார் நிலையில் இருக்கிறதா?

**பதில்:** தமிழ்நாடு மீட்புப்படைகளையும், மத்திய மீட்புப்படைகளையும் எல்லா இடங்களுக்கும் அனுப்பி இருக்கிறோம். அதுபோக, ரிசர்விலும் மீட்புப்படைகள் தயாராக வைத்திருக்கிறோம். எங்கு தேவை இருக்கிறதோ அங்கு அனுப்புகிறோம். எல்லா வகையிலும் மக்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்துவருகிறோம்.

**கேள்வி** : மத்திய அரசு ஆய்வுக்காக வர இருக்கிறார்களா?

**பதில்:** மழை முடிந்த பிறகு தான், ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைக்கவேண்டும். இங்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தைப் பொறுத்து ஒன்றிய அரசாங்கத்திற்கு கோரிக்கை வைக்கும்போது, ஒன்றிய அரசு அலுவலர்களை அனுப்பி முடிவு செய்வார்கள். அதை எதிர்பார்க்காமல் நமது விவசாயிகளுக்கு, அதாவது சில விவசாயிகளுக்கு காப்பீடு இருக்கும், சிலருக்கு காப்பீடு இல்லாமலும் இருக்கும். இவற்றை எல்லாம் என்ன செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவெடுப்பார்.

**கேள்வி** : ரெட் அலர்ட் கொடுத்தது இன்றுடன் முடிந்ததா? அல்லது...

**பதில்:** இன்று மாலைதான் புயல் கடப்பதாக கூறுகிறார்கள். புயல் கடந்து சென்றால்தான் ரெட் அலர்ட் முடிவடையும்.மழையுடன் காற்று சேர்ந்து அடிப்பதால்

எச்சரிக்கையாக இருக்கவேண்டும். குறிப்பாக, மக்கள் இருசக்கர வாகனங்களில் செல்வதை தவிர்க்க வேண்டும்.

**கேள்வி** : பாம்பு பிடிப்பவர்கள், நீச்சல் தெரிந்தவர்கள் போன்றவர்களை களத்தில் பயன்படுத்துவது குறித்து இதுவரை எவ்வளவு பேர் பயன்படுத்தப்பட்டுள்ளனர்?

**பதில்:**அவர்கள் அரசு அலுவலர்கள் அல்ல. தேவைப்படும் நேரத்தில் அந்த தன்னார்வலர்களை நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

**கேள்வி**: தண்ணீர் அதிகமாக தேங்கியிருக்கும் இடங்களில் படகுகள் மூலம் மீட்புப்பணி செய்யப்படுமா?

**பதில்:** மீட்புப் பணிக்காக 90 படகுகள் தயார் நிலையில் இருக்கின்றன.

**கேள்வி**: எவ்வளவு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன?

**பதில்:** இதுவரை சென்னையில் 15 இலட்சம் உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**கேள்வி**: 15 இலட்சம் என்பது எப்படி? குடும்பத்தைக் கணக்கிட்டு வழங்கப்படுகிறதா?

**பதில்:** இல்லை. உணவுப் பொட்டலங்களைத்தான் நாம் கணக்கெடுக்க முடியும்.

**கேள்வி:** உணவு விநியோகம் எப்படி நடக்கிறது? வீடு வீடாகச் சென்று வழங்கப்படுகிறதா?

**பதில்:** ஒரு மையத்தில் வைத்து மக்களுக்கு தாமதமில்லாமல் உணவு விநியோகிக்கப்படுகிறது.

**கேள்வி**: அவசரக்கால மையத்திற்கு தமிழ்நாடு முழுவதிலுமிருந்து தொலைபேசி வாயிலாக அழைப்புகள் மக்களிடமிருந்து வந்துகொண்டிருக்கிறதா?

**பதில்:** ஆம். வந்துகொண்டிருக்கிறது.

**கேள்வி**: எது குறித்து அழைப்புகள் வருகிறது? மருத்துவ தேவைகளுக்காக அழைப்புகள் வருகின்றனவா?

மருத்துவச் சேவைகளுக்கும் அழைப்புகள் வருகின்றன. அதிகமாக வரும் அழைப்புகள் என்னவென்றால் வீட்டிற்குள் தண்ணீர் வந்திருக்கிறது என்பதுதான்.

**கேள்வி**: அசோக் நகர், ஜெயகோபால் கரோடியா பள்ளியில் 150-க்கும் மேற்பட்டவர்கள் தங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு உணவு, துணிமணிகள், பாய்கள் எதுவுமே வந்துசேரவில்லை என்று சொல்கிறார்கள்.

**பதில்:** உடனே பார்க்கச் சொல்கிறோம். அப்படி இருப்பதற்கு வாய்ப்பு மிகக் குறைவு, நீங்கள் இப்போது சொல்லியிருக்கிறீர்கள், உடனடியாக அந்தப் பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

\- - - -